# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **024/2015**

ஆணை எண். **42/2016**

நாள் : **26/03/2016**

திருமதி D. பரிமளம்
க/பெ பட்டீஸ்ரன் **(Late)**
**2/33**, பஞ்சாயத்து வீதி,
கோவில் பாளையம், பொள்ளாச்சி. – முறையீட்டு மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
கிணத்துக் கடவு,
கோயம்புத்தூர். – எதிர் மனுதாரர்

பொள்ளாச்சி தாலுகா, கோவில்பாளையம் (அஞ்சல்) பஞ்சாயத்து வீதியில் குடியிருக்கும், திருமதி பரிமளம் அவர்கள், இறந்த, தனது கணவரின் ஓய்வூதிய பலன்கள் வேண்டி, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்த முறையீட்டு மனு, **02.04.2015** அன்று பெறப்பட்டு, **024/2015** என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஆணை

2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், விதி 2(7) இன் படி ' உள்ளாட்சி அமைப்பு ' என்பதற்கான பொருளில் " ஊராட்சி மன்றம் " மற்றும் " ஊராட்சி ஒன்றியம் " என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, முறையீட்டுதாரரின் மனு இம்முறைமன்ற நடுவத்தால், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்முறையீட்டு மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தாக்கல் செய்யுமாறு தனியரை கேட்டுக் கொள்ளலாம் என முடிவு செய்து ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
சோ. அய்யர்
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

திருமதி D. பரிமளம்
க/பெ பட்டீஸ்ரன் (Late)
2/33, பஞ்சாயத்து வீதி,
கோவில் பாளையம், பொள்ளாச்சி.

நகல்

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்
மாட்ட ஆட்சியர் அலுவலகம்
கோயம்புத்தூர்.